IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.151/2020

DEPOSITION OF WITNESS P.W.5

| | | |
|---|---|---|
| NAME | : | MURUGAN |
| FATHER'S NAME | : | RAJ |
| VILLAGE | : | ANUPU VILLAGE |
| OCCUPATION | : | DRIVER |
| AGE | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 3rd day of July 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் அனுப்பு கிராமத்தில் வசித்து ஓட்டுநர் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 21.06.2019ம் தேதி மாலை 4 மணிக்கு நான் அனுப்பு கிராமத்தில் இருந்து குடியாத்தம் நோக்கி எனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது பெருமாள் என்பவரின் நிலத்தின் அருகே வந்த போது எனது மாமா மகன் காந்தி என்பவருக்கு விபத்து ஏற்பட்டு இருந்தது. நான் அவரது அப்பாவிற்கு தகவல் சொல்லி 108 ஆம்புலன்ஸ் மூலம் குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை**

போலீசார் சம்பவம் நடந்த அன்று என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து நான் சம்பவயிடத்திற்கு வந்தேன் என்றால் 10 நிமிடங்கள் கழித்து வந்தேன். சம்பவ இடத்திற்கு 10 நிமிடம் கழித்து நான் வந்ததால் விபத்து எப்படி நடந்தது, யாருடைய அஜாக்கிரதையால் நடந்தது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் விசாரணையிலும் முதல் விசாரணையில் சொல்லிய விவரங்களை தான் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவத்தில் இறந்தவர் எனது மச்சான் என்பதால் இழப்பீடு வாங்குவதற்காக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.151/2020

DEPOSITION OF WITNESS P.W.6

| | | |
|---|---|---|
| NAME | : | PURUSHOTHAMAN |
| FATHER'S NAME | : | RAVI |
| VILLAGE | : | ANUPU VILLAGE |
| OCCUPATION | : | DRIVER |
| AGE | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 3rd day of July 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் அனுப்பு கிராமத்தில் வசித்து ஓட்டுநர் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 21.06.2019ம் தேதி மாலை 4 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது முருகன் என்பவர் எனக்கு போன் மூலமாக எனது மச்சான் காந்திக்கு பெருமாள் என்பவரின் நிலத்தின் அருகே விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான் காந்தியின் அப்பாவை அழைத்துக்கொண்டு சம்பவயிடத்திற்கு சென்றேன். பின்னர் 108 ஆம்புலன்ஸ்ஸில் ஏற்றி குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மேல் சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த போது வழியிலேயே இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை**

போலீசார் சம்பவம் நடந்த அன்று என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்காததால் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்காததால் விபத்து எப்படி நடந்தது, யாருடைய அஜாக்கிரதையால் நடந்தது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் விசாரணையிலும் முதல் விசாரணையில் சொல்லிய விவரங்களை தான் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவத்தில் இறந்தவர் எனது மச்சான் என்பதால் இழப்பீடு வாங்குவதற்காக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.